தமிழ் / Tamil

# Family Literacy
# எனக்கு ஒரு கதையைப் பரிசளி!



## குழந்தைகளின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும் திட்டம்



**பெற்றோர்களாகிய நீங்கள் உங்கள் குழந்தைகளின் மொழிவளர்ச்சியை நன்றாக ஊக்குவிக்கமுடியும்.**

SIKJM
Schweizerisches Institut
für Kinder- und Jugendmedien

**சேர்ந்து எழுத்தைக் கண்டுபிடிப்பது**

எழுத்துக்களும், குறியீடுகளும் உங்களுடைய பிள்ளையை நன்கு கவரும். உங்களின் உதவியுடன் குழந்தை எழுத்துக்களையும் அதன் வடிவங்களையும் தெரிந்து கொள்ளும். குழந்தை தாள்களையும், எழுதுகோல்களையும் எடுத்துப் பரீட்சித்துப் பார்க்க முயற்சிக்கும்.






**நூல் நிலையத்திற்குப் போவது**

**புத்தகங்கள் நல்ல நண்பர்கள் ஆகலாம். நீங்கள் உங்களுடைய பிள்ளையுடன் சேர்ந்து நூல் நிலையத்திற்குச் சென்று அங்கு புத்தகங்களை இரவலாக வீட்டிற்கு எடுத்து வரலாம்.**





**பல மொழிகளைப் பேச உதவுதல் (வெவ்வேறு தாய்மொழி பேசும் பெற்றோர்கள் கவனத்திற்கு)**

உங்களுடைய பிள்ளை இரண்டு அல்லது மூன்று மொழிகளை ஒரே நேரத்தில் கற்கமுடியும். எப்போது யாருடன் எந்த மொழியை பேசவேண்டும் என்ற விதிமுறைகளை குழந்தைக்குச் சொல்லிக்கொடுத்தால் அதுவே குழந்தையின் பலமொழிபேசும் ஆற்றலிற்கு உதவும்.







தொடர்புகளை உண்டாக்குவதற்கு கவலையை விடுங்கள். வேறு குழந்தைகளுடன் அல்லது பெரியவர்களுடன் உங்கள் குழந்தை தொடர்புகளை வைத்திருந்தால் அது குழந்தை ஜேர்மன்மொழியைக் கற்றுக்கொள்ள உதவும். இத்தொடர்புகளை ஏற்படுத்த உதாரணமாக மொன்டசெரி (Spielgruppen), குழந்தைகளைப் பராமரிக்குமிடம் (Kinderkrippen) போன்றவற்றிற்கு உங்கள் குழந்தைகளை அனுப்பவும் .



## தாய்மொழியில் பேசுவது

**நீங்கள் உங்களுடைய குழந்தையுடன் உங்களுக்கு மிக நன்றாகத் தெரிந்த மொழியில் பேசுவதால், அப்பிள்ளை வேற்று மொழிகளைப் பழகுவதற்கு அதுவே ஒரு திடமான அத்திவாரம் ஆக அமைகின்றது.**



வாசிப்பதை ஊக்குவிப்பதில் குடும்பமும் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது வாசித்தல், எழுத்துக்கள் போன்றவற்றில் பெற்ற அனுபவமும் மற்றும் முதல்மொழித் தேற்சியும் ஒரு குழந்தை ஜேர்மன் மொழியைக் கற்கவும் பாடசாலையில் வாசித்தலைக் கற்பதற்கும் அத்திவாரமாக அமைகின்றன. சுவிஸ் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான ஊடக நிறுவனம் (SIKJM) என்ற அமைப்பு “ எனக்கு ஒரு கதையைப் பரிசளி – Family Literacy ” என்ற திட்டத்தின்கீழ் பெற்றோர்களுக்கு தங்கள் குழந்தைகளின் மொழி மற்றும் வாசிப்புத் திறனை ஊக்குவிப்பதற்கு உதவிசெய்வதுடன், வெளிநாட்டவர்கள் தங்கள் தாய்மொழியைப் பேணுவதற்கும் ஊக்கமளிக்கின்றது.

## சொல்வதைக் கேட்பதும் அதற்குப் பதிலளிப்பதும்

உங்களுடைய பிள்ளை உங்களுடன் நிறையக் கதைப்பதன் மூலம் அதனுடைய பேச்சாற்றல் அதிகரிக்கிறது. நீங்கள் உங்கள் குழந்தை அவதானிக்கின்ற விடயங்கள் பற்றி குழந்தையுடன் உரையாடுவதால் குழந்தையின் சொற்பிரயோகம் விருத்தியாவதுடன் குழந்தைக்குப் புதியசொற்களைத் தெரிந்து கொள்ளும் ஆர்வமும் அதிகரிக்கும்.



**2 தொடக்கம் 5 வயது வரையிலான பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்குமான வாசிப்புத்திறனை ஊக்குவிக்கும் வகுப்புக்கள்**

பெற்றோர்களும், பிள்ளைகளும் சேர்ந்து தவறாது ஒவ்வொரு முறையும் கதை கூறும் நேரத்திற்கு அந்த இடத்திற்குச் செல்ல வேண்டும். கதைகளைக்கூறுதல், குழந்தைகளுக்கான கவிதைவரிகளையும் பாட்டுக்களையும் ஆடலுடன் செய்துகாட்டுதல், விளக்கப்படங்களுள்ள புத்தகங்களைக் பார்த்தல் போன்ற இன்னும் பல விடயங்களைக் கதைசொல்பவர் (Animator) உங்களுக்கு விளக்கிச்சொல்வார். இந்த வகுப்புக்கள் பெற்றோர்களுக்கு இலவசமாக வழங்கப்படும். இந்த வகுப்புக்கள் நூல்நிலையங்களிலும், (Quartierzentren) ஒன்றுகூடல் நிலையங்கள்), நேசரிப்பாடசாலைகள் போன்றவற்றில் நடைபெறும். கதைசொல்பவர் வீடுகளிற்குச் சென்றும் இந்த வகுப்புக்களை நடாத்துவார்.

**மகிழ்ச்சியாக சேர்ந்து உரையாடுதல்**

**சிறுவர்களுக்கான கவிதைவரிகள், பாடல்கள், ஆடலும் பாடலும் போன்றன ஒரு குழந்தை ஆசையுடன் மொழியைப் புரிந்து கொள்ள உதவுகின்றன.**





கலாச்சார மற்றும் மொழித் தொடர்பாளர்களிற்குரிய கற்கைநெறி மொன்டசெரி ஆசிரியை அல்லது கலாச்சார மொழித்தொடர்பாளர்கள் கதைசொல்லும் அனிமேற்றராக இருக்கலாம். இவர்கள் SIKJM (ஸிக்ஜிம்) இன் கற்கைநெறி மூலம் பயிற்சிகளைப் பெறுவார்கள்.

கதைகள் கூறுவதும், படங்கள் பார்ப்பதும் கதைகளும், படங்களும் உங்களுடைய பிள்ளையை புதிய உலகத்திற்கு அழைத்துச் செல்லும். குழந்தை உங்களுடன் சேர்ந்து புதியவிடயங்களைத் தெரிந்து கொள்வதோடு பல புதிய வார்த்தைகளையும் தெரிந்து கொள்ளும்.



**வெவ்வேறு மொழிகள்**

வாசிப்பதை ஊக்கப்படுத்தும் வகுப்புக்கள் அல்பானிஸ், அராபி, ஜேர்மன், பிரென்ஞ், குர்டிக்ஷ் போர்த்துக்கீசம, போஸ்னிஸ், குறோட்டிஸ், சேர்பிக்ஷ், ஸ்பெயின், தமிழ், துருக்கி போன்ற பலமொழிகளிலும் நடைபெறுகின்றன. அத்துடன் தேவைக்கேற்ப வேறுமொழிகளும் இணைத்துக்கொள்ளப்படும்.

Illustrationen: © Claudia de Weck. Gestaltung: Manuel Süess, Zürich

**மேலதிக தகவல்கள்**

**வேறுபட்ட கலாச்சாரத்திற்கான நூல்நிலையங்கள்**
சுவிஸில் பல்மொழிப் புத்தகங்கள் உள்ள நூல்நிலையங்கள் அனைத்திலும் எண்ணற்ற பலமொழிப் புத்தகங்கள் உள்ளன. இவ்வாறு பல்மொழி நூல்களைக் கொண்ட நூல் நிலையங்கள் அனைத்தும் புத்தகங்களிற்கு எல்லை இல்லை (VBOGS – Verein Bücher Ohne Grenzen Schweiz) என்ற மன்றத்தின்கீழ் இயங்குகின்றன.
www.interbiblio.ch

**Bibliomedia Schweiz – சுவிஸ் நூல்நிலைய ஊடகம்**
நகரநூலகம், கிராமநூலகம், பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலை நூலகங்கள் போன்றன சுவிஸ் நூல்நிலையத்திலிருந்து 11 பல்வேறுபட்ட மொழிகளில் உள்ள புத்தகங்களை இரவல் எடுக்கலாம்.
www.bibliomedia.ch

**குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்குமான ஊடக நிறுவனம் சுவிஸ் (SIKJM)**
SIKJM குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்குமான ஊடக நிறுவனம் எனக்கு ஒரு கதையைப் பரிசளி – Family Literacy என்ற திட்டத்தை 2006 ஆம் ஆண்டு ஆரம்பித்தது. 2008 ஆம் ஆண்டு சுவிஸ் யுனெஸ்கோ (UNESCO) அமைப்பின் கொமிற்றியின் அல்பா பரிசினை பெற்றுள்ளது. ஆவணி 2010 ஆம் ஆண்டு யுனிசெவ் நிறுவனம் பல்வேறுபட்ட கலாச்சாரங்களை ஊக்குவிப்பதற்காக யுனிசெவ் ஒரெஞ் பரிசினை வழங்கியது.

SIKJM நிறுவனம எனக்கு ஒரு கதையைப் பரிசளி – Family Literacy எனும் திட்டத்தை சுவிஸ் நாடுமுழுவதும் கொண்டுவர முயற்சிகளை எடுக்கின்றது. வாசிப்புத்திறனை ஊக்குவித்தல், குழந்தைகள், இளஞர்களுக்கான இலக்கியங்களை ஆய்வுசெய்தல், மற்றும் இதுசம்பந்தமான ஆவணங்களைப் பத்திரப் படுத்துதல் போன்றன SIKJM இன் முக்கிய வேலைகளாகும். அத்துடன் இது தன் கிளையை றோமாண்டீ, தெசின் போன்ற மாகாணங்களில் விஸ்தரித்துள்ளது. SIKJM அமைப்பானது Johanna Spyri-Stiftung எனும் நிறுவனத்தின்கீழ் இயங்குகின்றது.

Schweizerisches Institut
für Kinder- und Jugendmedien SIKJM

Zeltweg 11, 8032 Zürich
Tel. 043 268 39 00
info@sikjm.ch
www.sikjm.ch



SIKJM
Schweizerisches Institut
für Kinder- und Jugendmedien